**செய்தி வெளியீடு எண் : 008** **நாள் : 02.01.2023**

**<u>செய்தி வெளியீடு</u>**

தி இந்து (The Hindu) ஆங்கில நாளிதழில் மூத்த புகைப்படக் கலைஞராக பணியாற்றி வந்த திரு. கே. வி. சீனிவாசன் அவர்கள் (வயது 56), இன்று (02.01.2023) திங்கட்கிழமை, அதிகாலை 04.30 மணியளவில் சென்னை, திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயிலில் நடைபெற்ற வைகுண்ட ஏகாதசி வைபவ நிகழ்ச்சியை புகைப்படம் எடுத்து வெளியிடுவதற்கான பணியிலிருந்த போது, மாரடைப்பு ஏற்பட்டு இயற்கை எய்தினார்.

இந்த துயர செய்தியை அறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தி வெளியிட்டதுடன் மறைந்த திரு. கே. வி. சீனிவாசன் அவர்களின் குடும்பத்தினருக்கு பத்திரிகையாளர் குடும்ப நிதி உதவி திட்டத்தின் கீழ் ரூ. 5 லட்சம் வழங்கிட உத்தரவிட்டார்.

மேலும் ராயப்பேட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவரது உடலுக்கு மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியம் ஆகியோர் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்கள். பெருநகர சென்னை மாநகராட்சி பணி குழுத்தலைவர் திரு. சிற்றரசு உடனிருந்தார்.

************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**